**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.**

**அசல் வழக்கு எண். 63/2025**

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ம் நாள் திங்கள்கிழமை திரு/திருமதி.சாகுல் ஹமீது த/பெ.கபூர்சாகீப் என்பவரின் சாட்சியாக வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது ஏற்பாட்டின்படி **திரு.கோ.விஜயகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,** மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சாகுல் ஹமீது | தொழில் | : |
| தந்தை / கணவர் பெயர் | : | கபூர்சாகீப் | வயது | : |
| கிராமம் | : | | | : |
| தாலுக்கா | : | | | |

**வா.சா.1 : முதல் விசாரணை :**

நான் இந்த அசல் வழக்கின் வாதியாவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணமாக கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

15.05.1947 ம் தேதியிட்ட பழனிசாமி தாவா சொத்தை கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1,** 21.01.2011 தேதியிட்ட வாதி தாவா சொத்தை கிரையம் வாங்கிய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2,** வாதியின் பெயரிலுள்ள பட்டா அசல் **வா.சா.ஆ.3,** 23.05.2021ம் தேதியிட்ட 1ம் வாதியின் இறப்பு சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் **வா.சா.ஆ.4,** 01.09.2021ம் தேதியிட்ட வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.01.19 11:34:23 +0530